DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.304/2019**

**P.W.6**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | அம்ரூஸ் பிரிட்டோ |
| Father Name | : | இருதயராஜ் |
| VILLAGE | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.11.2024.

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது தமிழ்நாடு வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் செயலிழத்தல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிகிறேன். சம்பவ சமயமும் மதுரை மாநகர் வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் செயலிழத்தல் பிரிவில் தலைமை காவலராக பணிரிபுரிந்தேன். அப்போது எங்கள் பிரிவு சார்பு ஆய்வாளராக திரு.சிங்கம் என்பவர் வேலை பார்த்தார். கடந்த 03.11.2016 அன்று நீதித்துறை நடுவர் எண்,2, உசிலம்பட்டி உத்தரவின் பேரிலும், மதுரை மாநகர காவல் ஆணையாளர் உத்தரவின் பேரிலும், சார்பு ஆய்வாளர் திரு.சிங்கம் மற்றும் தலைமை காவலர் திரு.சுகுமாறன் மற்றும் நான் ஆகிய மூவரும் செக்கானூரணி காவல் நிலைய குற்ற எண்ணில் கைப்பற்றப்பட்ட ரெக்ஸ் 90 (எண்ணிக்கை –1200) மற்றும் எலெக்ட்ரிக் டெட்டனேட்டர் (எண்ணிக்கை –700)

ஆகியவற்றை சரிபார்த்து செக்கானூரணி அருகிலுள்ள கரடிக்கல் கல்குவாரியில் மிகவும் பாதுகாப்பான இடத்தில் அழிக்க செய்து அதற்குரிய ஆவணங்களை செக்கானூரணி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் கிருஷ்ணன் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

உசிலம்பட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு சொத்தை அழிப்பதற்கு யார் மனு தாக்கல் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கள் பற்றிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது. இந்த வழக்கு சொத்துக்களை நாங்கள் காவல் நிலையத்திலிருந்து பாதுகாப்பாக எடுத்து சென்றோம். மேற்படி கல்குவாரி யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது. என்னுடைய கு,வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் மேற்படி கல்குவாரியில் வழக்கு சொத்துக்களை அழிப்பதற்கு முன்பும் பின்பும் மண் மாதிரிகளை எடுத்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எலெக்ட்ரிக் டெட்டனேட்டர்கள் 25 டெட்டனேட்டர் வீதம் பேக் செய்யப்பட்டிருந்தது. ஜெலட்டின் குச்சிகள் இரண்டு அட்டை பெட்டிகளில் முழுவதும் பேக் செய்யப்பட்டிருந்தது. அந்த அட்டை பெட்டிகளையும் சேர்த்து எரித்துவிட்டோம். நான் மேற்படி அட்டை பெட்டிகளை எரித்ததாகவும், மேலே குறிப்பிட்டுள்ள எலெக்ட்ரிக் டெட்டனேட்டர்களும் ஜெலட்டின் குச்சிகளும் பேக் செய்யப்பட்டிருந்ததாக குறிப்பிடுவது தவறு என்றால் சரியல்ல. மேற்படி அட்டை பெட்டியில் வெடிபொருட்களின் தயாரிப்பாளர் பெயர், பேட்ச் எண்., தயாரிப்பு தேதி, அது என்ன வகையை சார்ந்த வெடிபொருள் என்ற விவரங்கள் இருக்கும் என்றால் சரிதான். எனக்கு மேற்படி

வெடிபொருட்களின் தயாரிப்பாளர் பெயர், பேட்ச் எண்., தயாரிப்பு தேதி ஆகியவற்றை பற்றி எனக்கு தெரியாது. சாதாரணமாக கல்குவாரியில் வெடிபொருட்கள் பயன்படுத்துவார்கள். நாங்கள் வழக்கு சொத்துக்களை அழிக்க பயன்படுத்திய இடத்தில் வெடிபொருட்கள் எதுவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்று உறுதிப்பட தெரிந்துகொண்டதாக என்னுடைய போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அ.சா.5 சிங்கம் என்பவருக்கு உதவியாக குவாரிக்கு செல்லவில்லை என்றும், அங்கு நான் எந்த வழக்கு சொத்தையும் அழிக்கவில்லை என்றும், மாதிரிகள் எதுவும் சார்பு ஆய்வாளர் கிருஷ்ணன் வசம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.